**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.120/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.3(கண்ணதாசன்)**
**21.07.2025**

2, 7 **பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. 03.06.1970 முதல் 30.06.1975 வரையிலான ஆவணங்களை மட்டும் தான் வைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அதற்கு பிறகு உள்ள ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை.

2. 1982ற்கு பிறகு மூக்கன்அம்பலத்தின் வயது மூப்பின் காரணமாக வெள்ளைச்சாமி என்பவர் தான் வீட்டின் வரவு செலவுகளை பார்த்துக்கொண்டு வங்கியில் உள்ள கடனுக்காக தவணை தொகைகளில் 10 தவணைகளை செலுத்தியுள்ளார் என்றும், அதுசம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. கடன் வசூலாகாமல் இருந்தால் வசூல் செய்வதற்காக வீட்டிற்கு ஜப்தி செய்ய செல்வார்கள் என்றால் சரிதான்.

4. 3 முறை வெள்ளைச்சாமியின் வீட்டிற்கு சென்று ஜப்தி செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி ஆவணங்கள் இல்லை. அவ்வாறு ஜப்திக்கு சென்றபோது வீட்டில் இருந்த பாத்திரங்களை வங்கி அதிகாரிகள் வங்கிக்கு எடுத்துவிட்டு வந்தார்கள் என்றும், வங்கி தவணை தொகை செலுத்திவிட்டு பாத்திரத்தை வெள்ளைச்சாமி திரும்ப பெற்றுசென்றார் என்றும் சொன்னால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும்.

5. மீண்டும் ஒருமுறை கிணற்றில் உள்ள ஆயில் மோட்டாரில் இருந்து பம்ப் மற்றும் நாசிலை வங்கி அதிகாரிகள் வங்கிக்கு எடுத்துவிட்டு வந்தார்கள் என்றும், வங்கி தவணை தொகை செலுத்திவிட்டு வெள்ளைச்சாமி திரும்ப பெற்றுசென்றார் என்றும் சொன்னால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும்.

6. மீண்டும் ஒருமுறை வீட்டில் இருந்த மாட்டை வங்கி அதிகாரிகள் வங்கிக்கு எடுத்துவிட்டு வந்தார்கள் என்றும், வரும் வழியில் வங்கி தவணை தொகை செலுத்திவிட்டு வெள்ளைச்சாமி திரும்ப பெற்றுசென்றார் என்றும் சொன்னால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும்.

7. வெள்ளைச்சாமி வங்கிக்கு பல தவணை தொகைகள் செலுத்தியுள்ளார் என்றும், ஆனால் ஆவணங்களை பார்க்காமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஓம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.